சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **153 / 2016**

பெயர்: கோபால் பி.வா.சா.1 தேதி **19.06.2024**

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

12.02.1974ம் தேதியிட்ட பாக பிரிவினை ஆவணப்படி எனது தகப்பனாருக்கு ஒரு அட்டவணை சொத்து கிடைத்துள்ளது தெரியுமா என்றால் தெரியும். மேற்படி ஆவணத்தில் எனது தகப்பனாருக்கு கிடைத்த சொத்தை அவரும் அவர் வழி வருபவர்களும் அடைந்து கொள்ள வேண்டியது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பாக பிரிவினை ஆவணத்தின் அடிப்படையில் தான் நான் உரிமை கோரும் உயில் ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1974 ம் வருட பாக பிரிவினை ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். மேற்படி பாக பிரிவினை ஆவணத்தில் எனது தகப்பனாருக்கு அனுபவம் செய்து கொள்ள மட்டுமே உரிமை வழங்கப்பட்டுள்ளது என்றும் எனது தகப்பானாரின் வழி வந்தவர்களுக்கு தான் சொத்தில் உரிமை உள்ளது என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு சொல்லப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியவில்லை. மேற்படி ஆவணத்தை படித்து பார்த்துவிட்டு வழக்கிற்காக அதை மறைக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி பாக பிரிவினை பத்திரத்தில் கண்டுள்ள எனது தகப்பனாருக்கு வழங்கப்பட்ட சொத்துக்களை அவர் வழி வருபவர்கள் அடைய வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளதால் வாதி பிரதிவாதிகளுக்கு அதில் சம பங்கு உண்டு என்றால் சரியல்ல. மேற்படி 1974ம் வருட பாக பிரிவினை ஆவணத்தை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் போலியாக தயாரித்துள்ள சில ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என தெரிந்துவிடும் என்பதால் தான் மேற்படி பாக பிரிவினை ஆவணத்தை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 7ம் பிரதிவாதி தனத்திற்கு இரண்டு மகன்கள் உண்டு அவர்களை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் அவசியம் இல்லை என்பதால் சொல்லவில்லை. தனத்தின் ஒரு மகன் பெயர் சங்கர் என்றால் சரிதான். மேற்படி தனம் திருமணத்திற்கு பின்னர் எனது தாயார் வீட்டின் அருகே வசித்து வந்தார். மேற்படி தனத்தின் கணவர் என்ன வேலை செய்துவந்தார் என்றால் கார் ஓட்டுநராக இருந்தார். எனது தாயாரும் தனமும் எந்த காலத்திலும் கூட்டு குடும்பமாக எந்த காலத்திலும் வசித்ததில்லை என்றால் சரிதான். பி.வா.சா.9 உயில் ஆவணத்தை எனக்கு பின்னிட்டு 4ம் பிரதிவாதியும் அவரது மகன்களும் அனுபவித்துக்கொள்ள வேண்டியது என்று தான் எனது தகப்பனார் உயில் எழுதி வைத்ததாக வழக்கு நடத்தி வருகிறேன். 1974ம் வருட பாக பிரிவினை ஆவணத்தின் படி எனது தகப்பனாருக்கு உயில் எழுதி வைக்க உரிமையே கிடையாது என்றால் சரியல்ல. 05.02.2019ம் தேதி ஆவணம் எண் 25/2019

மூலமாக வடிவேலு தன்னை முறையாக பராமரிக்கவில்லை என்று பாப்பம்மாள் அவர் எழுதி வைத்த 2018 ம் வருட உயிலை ரத்து செய்துவிட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி உயில் ரத்து செய்யப்பட்ட விவரத்தை வழக்கில் நான் எந்த இடத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். 05.02.201 ம் தேதியிட்ட மேற்படி உயில் ரத்து ஆவணத்தை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த ஆவணம் என்னிடம் இல்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை. பி.வா.சா.15 ஆவணத்தில் மேற்படி உயில் ரத்தான விவரத்தை சொல்லவில்லை என்றால் மேற்படி உயில் 2019 ம் வருடம் தான் ரத்து செய்யப்பட்டது, பி.வா.சா. 15 ஆவணம் 2013 ம் வருடம் ஏற்பட்டதாகும். 26.11.2009 ம் தேதியிட்ட பாப்பம்மாள் வடிவேலுக்கு எழுதி வைத்த உயில் ஆவணத்தை பற்றி பி.வா.சா.15 ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் தேவையில்லை என்பதால் சொல்லவில்லை. 2009 யில் ஒரு உயில் எழுதியதாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் 2013 ம் வருடம் எனது தாயார் எனக்கு செட்டில் மெண்ட் ஆவணம் எழுதி வைத்ததாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் அவர் சொத்து அவர் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். 2009 ம் வருடம் ஒரு உயில் இருப்பதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் 2019 ம் வருடம் அது ரத்து செய்துவிட்டதாக கூறியுள்ள நிலையில் மேற்படி இரண்டு ஆவணங்களையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் இவ்வழக்கிற்கு தேவையில்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை. மேற்படி இரண்டு ஆவணங்களும் தாவா சொத்து சம்பந்தப்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். நான் அரிசி வியாபாரம் செய்து வருகிறேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் நான் என்ன தொழில் செய்து வருகிறேன் எவ்வளவு வருமானம் ஈட்டுகிறேன் என்று சொல்லவில்லை என்றால் இவ்வழக்கிற்கு தேவையில்லை என்பதால் சொல்லவில்லை. எனது எதிர் வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ நான் எனது தாயாரை பராமரித்து வந்தேன் என்றும் கூட்டு குடும்பமாக எனது தாயார் உடன் வசித்து வந்தேன் என்றும் எந்த இடத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.1 ஆவணத்தில் தாவா சொத்தில் உள்ள வீடு கெட்டி மெத்தை வீடு என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1975 ம் வருடத்தில் எனது தாயார் பாப்பம்மாள் அவர்களால் வாங்கப்பட்ட கிரைய ஆவணத்திலேயே தாவா சொத்தில் கெட்டி மெத்தை வீடு இருந்தாக காட்டப்பட்டுள்ள நிலையில் எனது நிரூபண வாக்குமூலத்தில் கட்டிடம் புதிதாக கட்டப்பட்டதை போல் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் அதை இடித்துவிட்டு புதிதாக கட்டிடம் கட்டப்பட்டது. மேற்படி விவரத்தை எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் புதிதாக கடை கட்டியதை மட்டும் சொல்லியுள்ளேன். தாவா சொத்து சம்பந்தமாக எனது தாயார் பாப்பம்மாள் அவர்களால் சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்துக்கும் மேற்பட்ட உயில்கள் எழுதப்பட்டும் பத்துக்கும் மேற்பட்ட உயில்கள் ரத்து செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் மூன்று பற்றி விவரங்கள் மட்டுமே தெரியும். தாவா சொத்துக்கள் பற்றி பாப்பம்மாள் என்னென்ன ஏற்பாடுகள் செய்து வைத்துள்ளார் என்ற முழுமையான விவரம் தெரியாமலே எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 7 ம்

பிரதிவாதியான தனம் என்பவருக்கு தாவா சொத்துகளில் தனிப்பட்ட பாத்தியம் எதுவும் இல்லை என்றால் எனது தாயார் எழுதி வைத்த உயில் மூலம் தான் பாத்தியம். மேற்படி தனத்திற்கு எழுதி வைத்த உயிலை எனது தாயார் ரத்து செய்ய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். உயில் ரத்து செய்யப்பட்ட பின்னும் நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் தனம் மேற்படி சொத்தில் அனுபவத்தில் இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் அவர்தான் அனுபவித்து வருகிறார். மேற்படி சொத்தை தனம் அனுபவித்து வருவதாக பொய் சொல்லி வருகிறேன் என்றும் அது ஒரு ஸ்டோர் வீடு என்றும் சொன்னால் அதில் மூன்று வீடு உள்ளது ஒரு வீட்டில் தனம் அனுபவித்து வருகிறார் மற்ற இரண்டு வீடுகளை தனம் வாடகைக்கு விட்டு வாடகை வாங்கி வருகிறார். மேற்படி வீடுகளை எனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக நிரூபண வாக்கு்மூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் எனது சகோதரி உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் நான் மேற்பார்வை செய்து வருகிறேன். மேற்படி வீடுகள் எனது அனுபவத்தில் இல்லையா என்றால் தனத்திற்கு பாத்தியப்பட்டது நான் மேற்பார்வை மட்டுமே செய்து வருகிறேன். நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி சொத்துக்கள் என் அனுபவத்தில் இருப்பதாக சொல்லியுள்ளது தவறானதா என்றால் மேற்படி ஸ்டோரில் நான்கு வீடு மற்றும் இரண்டு கடைகள் உள்ளது, அதில் மூன்று வீடுகள் எனது சகோதரிக்கும், ஒரு வீடு மற்றும் இரண்டு கடைகள் எனக்கு பாத்தியப்பட்டது, அதனால் மொத்த சொத்தை அனுபவத்தில் இருப்பதாக சொல்லியுள்ளேன். மேற்படி ஸ்டோரில் மூன்று வீடுகள் இருப்பதாக சொல்லிவிட்டு தற்போது நான்கு வீடு இரண்டு கடைகள் என்று முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா பி அட்டவனை 3 வது அயிட்ட சொத்தை பொறுத்து 6 வது பிரதிவாதிக்கும் அவரது மகன் சக்திவேலுக்கும் 07.05.2008 ம் தேதி ஏற்படுத்தி வைக்கப்பட்ட உயில் ரத்து செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அசல் வழக்கு எண் 95/2016 என்ற வழக்கின் மேல் முறையீடு நிலுவையில் இருப்பதை காட்ட ஆவணங்கள் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கு எண். 95/2016 ல் சம்பந்தப்பட்ட சொத்துக்கும் தாவா சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்ற விவரத்தை நான் இவ்வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து வாதி பிரதிவாதிகள் அனைவருக்கும் பாத்தியப்பட்ட சொத்து என்றும் அதில் நான் தனிப்பட்ட முறையில் உரிமை கோர முடியாது என்றும் சொன்னால் சரியல்ல. 1974 ம் வருட ஆவணத்தின் மூலமாக கிடைக்கப்பெற்ற வருமானத்தின் மூலமாக மட்டுமே தாவா வழக்கின் இதர சொத்துக்கள் அனைத்து வாங்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. 1974 ம் வருட ஆவணம் மூலமாக எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட நிலங்கள் அனைத்தும் விளை நிலங்களா என்றால் விளை நிலங்கள் கிடையாது. மேற்படி 1974 ம் வருட ஆவணத்தில் அந்த நிலங்கள் விளை நிலங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதை தெரிந்துக்கொண்டிர்களா என்றால் அவ்வாறு அந்த ஆவணத்தில் குறிப்பிடவில்லை. மேற்படி நிலங்கள் விளை நிலங்கள் தான் என்று எனக்கு நன்கு தெரியும் என்றும் வழக்கிற்காக

அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வருவாய் ஆவணங்களிலும் அந்த நிலங்கள் விளை நிலங்கள் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் 5ம் பிரதிவாதிக்கு 8ல் ஒரு பாகம் பங்கு உள்ளது என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதிக்கு சி செடியூல் சொத்திகளில் 8ல் ஒரு பாகம் பங்கு உள்ளது என்றால் சரிதான். நான் குறிப்பிடும் உயில் ஆவணங்கள் அனைத்து மோசடியாக என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அ மற்றும் ஆ அட்டவனை சொத்துகளை கூட்டாக தான் அனுபவம் செய்து வருகிறோம் என்றும் யாரும் தனித்து அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதி பிரதிவாதிகளுக்கு சம உரிமை உண்டு என்றால் சரியல்ல. எனவே 5ம் பிரதிவாதி கேட்டுள்ளவாறு எதிர் கோரியுரிமை வழங்க வேண்டியது என்றால் சரியல்ல.

ஒம்/- கோபால்

ஒம்/ K. இன்ப கார்த்திக்,
சார்பு நீதிபதி,
குளித்தலை.